**OS.70/2022**

**நாள். 07.08.2025.**

**பி.வா.சா.1 – ராஜேந்திரன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை என் மகள் சத்யா படித்துக் காண்பித்துத்தான் நான் கைரேகை செய்தேன் என்றால் சரிதான். என் மகள் மீது வாதி பாலு OS.61/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திலும், எதிர்உரையிலும் வாதி என் மகளை ஏமாற்றி அடமான பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் வாதி வட்டி கேட்டு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மகள் வீட்டிற்கு வந்த வாதியிடம் வாதி அவர் வாங்கிய கடனுக்கு வட்டி கேட்டு வந்தபோது என் மகளும், அவரது கணவர் தாமரை செல்வனும் கால அவகாசம் கேட்டார்கள் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்றால் நான் எழுதப்படாத ஆவணத்தில் கைரேகை வைத்து கொடுக்க வேண்டும் என்று வாதி கேட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான், என் மகள், என் மருமகன் வீட்டில் இருக்கும்போது தான் வாதி வட்டி கேட்டு வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். நான் என் மகளை வாதி ஏமாற்றி கையெழுத்து வாங்கிக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் என் மகள் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வாதி என் மகளை மிரட்டி வாங்கிக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அதில் எது சரி என்றால் என் மகளை மிரட்டி கையெழுத்து வாங்கியதுதான் சரி. என் மருமகன் தாமரை செல்வன் ஒப்பந்த தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். என் மருமகன் ரோடு மற்றும் கட்டிடம் கட்டும் ஒப்பந்த தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். என் மருமகன் ஒப்பந்த தொழில் செய்யும்போது பணம் தேவைப்பட்டால் தெரிந்தவர்களிடம் வாங்கி திருப்பி கொடுத்துவிடுவார் என்றால் சரிதான்.

அதேபோல் என் மருமகனுக்கு பணம் தேவைப்படும்போது நானும், என் மகளும் பணம் வாங்கிக்கொடுப்போம் என்றால் நான் வாங்கிக் கொடுத்ததில்லை, என் மகள் வாங்கி கொடுத்தாரா என்பது எனக்கு தெரியாது. 2018 – 2019ம் வருடங்களில் என் மருமகன் ஒப்பந்த தொழில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கு எடுத்தார் என்பது எனக்கு தெரியாது. என் மருமகனுக்கு 2019காலகட்டங்களில் சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை. என் மருமகனுக்கு எந்த சொத்தும் இல்லை என்பதால்தான் எனது சொத்தை ஆதரவாக கொடுத்து வாதியிடம் பணம் வாங்கிக்கொடுத்தேன் என்றால் இல்லை. என் வீட்டிற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே 200 மீட்டர் தூரம்தான் இருக்கும் என்றால் சரிதான். வாதி 21.07.2021ம் தேதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. வாதி 13.08.2021ம் தேதி ஒரு திருத்தப்பட்ட அறிவிப்பை அனுப்பினார் என்றும் அதையும் நான் 17.08.2021ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாதி என் மீதும், என் மகள் மீதும் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்த பிறகுதான் எங்கள் தரப்பில் வாதிக்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் 08.09.2022ம் தேதி ஆஜராகி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. நான் இரண்டு முறை எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்ற காரணத்திற்காக ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டு மீண்டும் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால்தெரியாது. நான் வாதிக்கு கடனுறுதி ஆவணம் (வா.சா.ஆ.1) எழுதிக்கொடுத்த அன்று என் தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட கிரைய பத்திரத்தின் அசலையும், எனது பெயரில் உள்ள பட்டாக்களையும் (வா.சா.ஆ.6 முதல் 8) கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த கடன் உறுதிமொழி ஆவணம் 02.08.2021ம் தேதி எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கடனுறுதி ஆவணத்தில் நான் இன்று தங்களிடம் எனது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், அவசர தேவைக்காகவும் தங்களிடம் வாங்கியது ரூ.17 லட்சம் ஆகும்., இதனை மாதம் ஒன்றுக்கு 100–க்கு 2சதவீதம் வட்டிவீதம்

சேர்த்து தங்கள் வேண்டும்போதோ தாங்கள் உத்தரவு பெற்ற நபர்வேண்டும்போதோ செலுத்திவிடுவேன் என உறுதி அளிக்கிறேன். மேலும் இன்று எனது தாயார் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தையும், என் பெயரில் உள்ள பட்டாவையும் செலுத்தியுள்ளேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கடனுறுதி பத்திரத்தை வாதி பேரன் காசி விஸ்வநாதன் எழுதினார் என்றால் அவர் யார் என தெரியாது. கடனுறுதி பத்திரம் வாங்குவதற்கு என் ஆதார் கார்டை வைத்து எனது பெயரில் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்களாக எழுதிக்கொண்டால் எனக்கு என்ன தெரியும். கடனுறுதி பத்திரத்தில் என் மகள் சத்யா 1வது சாட்சியாகவும், என் மருமகன் தாமரை செல்வன் 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான்.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.